4. ஒழுங்குப் பிரச்சினை

வறட்சி குறித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பெற்ற அறிக்கை.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். தமிழகத்திலே நிலவும் கடுமையான வறட்சி குறித்து தமிழக அரசு மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பிவிட்டதாக ஆளுநர் அவர்களின் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைச் சேர்ந்தவரும், மத்தியிலே துணை வேளாண்மைத்துறை அமைச்சராக இருப்பவருமான திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் அப்படிப்பட்ட அறிக்கை வரவில்லை என்றும் அப்படிச் சொன்னது உண்மைக்கு மாறானது என்றும் அதாவது உண்மைக்கு மாறானது என்பதற்கு வேறுவகையில் பயன்படுத்தப்படுகின்ற அந்த வார்த்தையினையே சொல்லி, அவர்கள் அவ்வாறு பேசி இருப்பது எல்லாப் பத்திரிக்கைகளிலும் வந்திருக்கின்றது. எனவே நான் இந்த மாமன்றத்திலே அமைச்சரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் வறட்சி குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பி விட்டார்களா? ஆம் என்றால் எப்போது அனுப்பினார்கள்? அந்தத் தேதியினை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப் பற்றி வேறு வகையில் ஏதாவது ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கலாம். ஆனால் இப்படி திடீரென்று எழுந்து பத்திரிகையிலே வந்தது என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுபவம் மிக்கவர்கள். ஆற்றலும் வாய்ந்தவர்கள். நாடாளுமன்ற முறைகள் தெரிந்தவர். எனவே அவர்கள் இப்படித் திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும். ஆகவே இதைப்பற்றி கேள்வியாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ, கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ அப்படி ஏதாவது ஒரு வகையிலே கொண்டு வரலாம். இப்படி திடீரென்று எழுந்து கேட்பது சரியல்ல.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே. நான் கேட்பது அறிக்கை அனுப்பிவிட்டீர்களா என்பது தான். அனுப்பப்பட்டு விட்டது என்றால் ஆம் அனுப்பிவிட்டோம் என்று கூறலாம். ஆனால் அறிக்கை அனுப்பாமல்....

(முற்பகல் 10.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த குற்றச்சாட்டை எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சொல்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: இது நியாயமான குற்றச்சாட்டுதான்.

1983 சனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த முறையில் அதைக் கொண்டுவர வேண்டுமோ அந்த முறையில் அதை கொண்டு வாருங்கள்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இது ஒன்றும் பெரிய பலிசி மேட்டர் இல்லை. அறிக்கை அனுப்பப்பட்டதா? இல்லையா? அனுப்பப்பட்டது என்றால் எந்தத் தேதியில் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது நான் மத்தியப் பேரரசின் அமைச்சர் அவர்களுடைய பதிலை மறைத்து சொன்னதாக சொன்னார்கள்....

திரு. துரைமுருகன்: அப்படிச் சொல்லவில்லை. அறிக்கை அனுப்பிவிட்டீர்களா? இல்லையா? ஆம் என்றால் என்றைக்கு அனுப்பினீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அறிக்கை அனுப்பி ஆகிவிட்டதா இல்லையா என்பதை மட்டும் அவைக் குறிப்பில் வைத்துக்கொண்டு கேட்டால் நான் பதில் சொல்கிறேன்.

திரு. துரைமுருகன்: இதில் ஒன்றும் பெரிய ராஜ தந்திரமோ, ரகசியமோ கிடையாது. அறிக்கை அனுப்பினீர்களா? என்றைக்கு அனுப்பினீர்கள்? இந்த மன்றம் தலையானது, ஆகவே மன்றத்தில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த மாதம் 24-ஆம் தேதி காலையில் இங்கே அலுவலகத்தில் இருக்கிற துணைச் செயலாளர் மூலமாக நேராக அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. துரைமுருகன்: 24-ஆம் தேதி தான் ஆளுநர் உரை இங்கே படிக்கப்படுகிறது. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரைமுறைகளின்படி நடந்து கொண்டால் நன்றாக இருக்கும். திடீர் திடீர் என்று எழுந்து கேட்கக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த அவையினுடைய நிகழ்ச்சிகள் எப்படி நடத்தப்படவேண்டும் என்பதற்கு வரைமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அதைத்தான் குறிப்பிட்டார்கள். திடீர் என்று கேள்வி கேட்டவுடனே திடீர் என்று பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும்கூட பேரவைத் தலைவர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

(டாக்டர் இரா.நெடுஞ்செழியன்) [1983 சனவரி 27

அவர்கள் சொன்னதுமாதிரி முறைப்படி எழுதிக்கொடுத்து கேட்டால் தான் முழு விவரத்தோடு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கமுடியும். அமைச்சர் அவர்கள் எந்தத் தேதி என்று குறிப்பிட்டார்கள். அதைக்கூட கூறியிருக்க வேண்டியது அவசியம் இல்லை. இருந்தாலும் அவர்கள் பெருந்தன்மையின் அடிப்படையில் இந்த அவையின் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அதை அளித்திருக்கிறார்கள். இந்த விவாதத்திலே கலந்து கொள்கிறபோது பிரச்சனைகளை எழுப்பலாம். தனியாகக் கேட்கவேண்டும் என்றால் சட்டப் பேரவையின் விதிமுறைகளின்படிதான் கேட்கவேண்டும். ஒரு அடிப்படையும் இல்லாமல் திடீர் என்று எழுந்து கேட்பது என்பது சரிப்பட்டு வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சுருக்கமாகச் சொன்னது உங்களுக்கு விளங்கவில்லை. அதையே நாவலர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: ஜீரோ அவர் என்பது நாவலர் அவர்களுக்கு புதுமையானது அல்ல.

5. தகவல் கோரல்

(அ) பேருந்து விபத்து

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலிருந்து சிலோனுக்கு 36 பேர்கள் சுற்றுலா சென்று இருக்கிறார்கள். அவர்கள் பேருந்து மூலம் செல்கிற நேரத்தில் 16 பேருக்கு விபத்து ஏற்பட்டு அதில் 3 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை எல்லாம் எழுத்து மூலமாக கொடுத்து விளக்கங்களை கேட்டால் விளக்கம் தர முடியும். ஒவ்வொரு ஊரிலிருந்தும் சுற்றுலா போகிறார்கள். ஆங்காங்கே விபத்துகள் தினசரி நடந்துகொண்டிருக்கின்றன. உங்கள் தொகுதியிலிருந்து போனவர்களாக இருந்தால் அதற்காக தனி முக்கியத்துவம் அளிக்கமுடியாது.எழுத்து மூலம் கொடுங்கள்.

(ஆ) ஆந்திராவிலிருந்து அரிசி கொண்டு வருதல்.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடக்கும்போது நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆந்திராவிலிருந்து 40 லட்சம் டன் அரிசி கொண்டு வருவது பற்றி வெளியில் பேசியிருக்கிறார்கள்...